அவர்களின் விசுவாசம் தளரவில்லை. ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். காலை மருத்துவர் வந்து சோதித்தபோது வெகு ஆச்சரியம். சுந்தர் நன்கு சுகமடைந்து படுத்திருந்தார்.

மரித்துப்போய்விடக்கூடிய ஒரு மனிதன் பிழைத்திருக்கிறான். மரண நேரம் குறிப்பிட்டவன் கண் விழித்துக் கிடக்கிறான்.

(தொடரும்)

வேதபாடம்

உன்னதப்பாட்டு

தொடர்ச்சி - பாடம் 16

(உன்னதப்பாட்டு 4:16; 5:1)

மணவாட்டியினுடைய வளருகின்ற அன்பு உன்னதப்பாட்டு 4:16, 5:1 வசனங்களோடு முடிவடைகிறது. உன்னதப்பாட்டு 4:12 முதல் 5:1 வரையுள்ள வசனங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் விசுவாசிகளுடைய உள்ளான அழகை விவரிக்கின்றன.

16 ஆம் வசனம்

"வாடையே! எழும்பு; தென்றலே! வா" (உன்.4:16);

கிறிஸ்து இயேசுவின் தோட்டமாக விளங்கும் தன்னிடத்தில் வாடைக் காற்றும், தென்றல் காற்றும் வீசவேண்டும் என்று மணவாட்டி வாஞ்சித்தாள். "காற்று" என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் சொல்லாகும். நிக்கொதேமு என்ற பரிசேயனிடத்தில் இயேசு, "நீ மறுபடியும் பிறக்கவேண்டும்" என்றார். அதை அவன் விளங்கிக்கொள்ளாது திகைத்தபோது, இயேசு கிறிஸ்து கீழ்க்காணுமாறு அவனோடு பேசினார்.

"காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" (யோவான் 3:8).

பரிசுத்த ஆவியானவர் மணவாட்டியின் வாழ்க்கையில் வாடைக்காற்றாகவும் தென்றல் காற்றாகவும் விளங்கினார். ஆம், விசுவாசிகளின் வாழ்க்கையில் வாடைக்காற்றும், தென்றல் காற்றும் அவசியம். வாடைக்காற்று குளிர்ச்சியாகவும், புத்துயிர் ஊட்டுகின்றதாகவும் காணப்படும்; *"வடகாற்று மழையையும்,... பிறப்பிக்கும்"* என்று நீதிமொழிகள் 25:23 இல் வாசிக்கி...

வடகாற்று விசுவாசிகளின் ஆ... வாழ்க்கையின் அநுபவமாகும். இயேசு கி... வால் சந்திக்கப்பட்ட விசுவாசிகளின் வாழ்... யில் மகிழ்ச்சியும், ஆசீர்வாதமும் சமாதா... காணப்படும். அவர்கள் பெற்றுக்கொ... சுகமாக்குகிற வரம், தீர்க்கதரிசன வரம், ... தங்களைச் செய்யும் வரம் ஆகிய ஆவி... வரங்கள் வாடைக்காற்றின் அநுபவங்க...

தென்றல் காற்று என்பது ... உஷ்ணமாக வீசுவதால் இலை மறை... காணும் கனிகளைப் பழுக்கவைக்கும் த... யுடையதாய்க் காணப்படும். இது விசு... களின் கனிதரும் வாழ்க்கையைச் சுட்டிக்... கிறது. கனிதரும் வாழ்க்கையைப் ... மணவாட்டி நேசராம் இயேசுவின் பாடு... னூடே சென்றாள். அதுபோல, விசுவா... சோதனைகள், துன்பங்கள், நிந்தை... வழியாகச் சென்றால்மட்டுமே நேச... இயேசுவின் திவ்விய சுபாவங்களான கனி... வெளிப்படுத்திக் காட்டமுடியும்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆவி... வரங்களைக்காட்டிலும், ஆவிக்குரிய கனி... முக்கியம் வாய்ந்தவை. மத்திய ஆகாய... நேச மணவாளன் இயேசு கிறிஸ்து வரும்... ஆவியின் கனி நிறைந்தவர்களைத்... தம்மோடு அழைத்துச் செல்வார். தேவனு... இராஜ்ஜியம் பரவுதலுக்கு ஆவியின் ... அவசியம்தான். எனினும், சபை ஆவி... கனியை மிகவும் நாடவேண்டும். காய்கள்... களாய் மாற உஷ்ணக் காற்று அ... மல்லவோ? பாடுகளாகிய தென்றல் கா... அநுபவித்தால்மட்டுமே சபை இனிமை... கனிகளைப் பெறமுடியும்.

அப்போஸ்தலர் 14 ஆம் அதிகா... முதல் 22 வசனங்கள் வரை வாசிக்க...

ம் பர்னபாவும் இயேசுவுக்காய் வல்லமை பயன்படுத்தப்பட்டனர். தாயின் றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த தன், சுவிசேஷத்தை அறிவித்த பரிசுத்த ின் சொற்பொழிவைக் கேட்டுச் சுகம் றான். இந்த மாபெரும் அற்புதத்தைக் அங்குள்ள மக்கள், அவர்கள் இருவ ும் தேவர்களென்று எண்ணி, பூமாலை யும், பலிகளையும் அவர்களுக்குச் த்த முற்பட்டனர். இது வாடைக்காற்றுக்கு ன சம்பவம் ஆகும்.

அதே அதிகாரத்தில் 19-22 வசனங் வாசிப்போமானால், பவுல் அப்போஸ் ின பயங்கரமான உபத்திரவங்களை நாம் லாம். பவுலைக் கல்லெறிந்தது மட்டு பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக் டுபோனார்கள் அங்குள்ள மக்கள். இது றல் காற்றின் அநுபவத்திற்கு ஒப்பனை. போஸ்தலனாகிய பவுலை வாடைக்காற்று தவும் இல்லை; தென்றல் காற்று தவும் இல்லை. நேசராம் இயேசுவின்மீது கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக் வாய் நடக்கிறது என்பதை மணவாட்டி திருந்ததுபோல, சபை மக்களும் வேண்டும்.

அநேக உபத்திரவங்களின் வழியாய்த் னுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க டும் என்பதைப் பவுல் அப்போஸ்தலன் ந்ததினால் (அப்.14:22), தேவ பிள்ளை அவன் திடப்படுத்தினான். கிறிஸ்தவ கை வாடைக்காற்றும் தென்றல்காற்றும் ஒரு வாழ்க்கையாகும். வடகாற்றின் மையால் உயர்ந்து, விசுவாசிகள் தங்களை த்தவும் கூடாது. தென்றல் காற்றின் திரவங்கள் விசுவாசிகளை அசைக்கவும் து.

"கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத் சீ" (உன்.4:16);

கிறிஸ்தவ வாழ்க்கையில் காணும் சுபாவங்களால் வீசும் நறுமணத்தையே ட்டிக்காட்டுகின்றது. தோட்டத்திற்கு ஒப்பிடப்பட்ட சபைக்கு அநுகூலங்களும் பிரதிகூலங்களும் மாறி, மாறி உண்டாகும். ஆனாலும் சபை கிறிஸ்துவின் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றிருக்கவேண்டும் (எபே.3:17).

2 கொரிந்தியர் 6:3 முதல் 10 வரையுள்ள வசனங்களில் பரிசுத்த பவுல் கூறியுள்ளவை களை வாசிக்கவும். *"கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப் பண்ணுகிறோம்"* (2 கொரி.6:8,10) என்கிறார் பவுல். எல்லாவிதத்திலும் ஆதி அப்போஸ்தலர்கள் தங்களைத் தேவ ஊழியர்களாக விளங்கப்பண்ணினர்.

ஆம், சபை விசுவாசிகள் தங்களது வாழ்க்கையாகிய தோட்டத்தில் கந்தப்பிசின்கள் வடியும்படி, இவ்விருவித காற்றுகளினாலும் நறுமணம் வீசி மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.

"என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" (உன்.4:16).

இங்கு, *'தம்முடைய தோட்டம்'* என்று கூறப்பட்டுள்ளது காண்க. *'தம்முடைய தோட்டம்'* என்பது நேசருக்குச் சொந்தமானது. இதன் முந்தின பகுதியில், *'என் தோட்டத்தில் வீசு'* என்ற சொற்களைக் காண்கிறோம். மணவாட்டி மணவாளனுக்குச் சொந்தம். அவளுக்குச் சொந்தமானவைகள் எல்லாவற்றையும் அவள் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவைகளாகும். *"பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்"*

என்று 2 கொரிந்தியர் 5:15 இல் காண்கிறோம்.

பரிசுத்த ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம் போன்ற திவ்விய சுபாவங்களை வெளிப்படுத்தி நாம் அவரைத் திருப்திப்படுத்துவோம். **சபை இப்போது நேசரின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. விசுவாசிகள் தங்களது வாழ்க்கையின் ஆவியின் கனியை நேசர் மகிழ்ந்து புசிக்க, அவரை வரவேற்கவேண்டும். அவர் சமுகத்தில் நித்தம் மகிழ்ச்சியோடு வாசஞ் செய்யவேண்டும்.**

உன்னதப்பாட்டு 5 ஆம் அதிகாரம்

1 ஆம் வசனம்

''என் சகோதரியே! என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன், என் வெள்ளைப்போளத்தையும் என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன்; என் தேன்கூட்டை என் தேனோடு புசித்தேன்; என் திராட்சரசத்தை என் பாலோடும் குடித்தேன். சிநேகிதரே! புசியுங்கள்; பிரியமானவர்களே! குடியுங்கள், பூர்த்தியாய்க் குடியுங்கள்'' (உன்.5:1).

''நான் என் தோட்டத்தில் வந்தேன்'' என்று நேசர் உரைப்பதை இங்குக் காண்கிறோம். இவ்வசனத்தில், *'என்'* என்ற சொல் ஒன்பது முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சபையின்மீது கிறிஸ்து இயேசு மிகுந்த உரிமையுடன் சொந்தம்பாராட்டுவதையே இவை குறிக்கின்றன. அதாவது, விசுவாசிகளுக்குச் சொந்தமான அனைத்தும் கிறிஸ்துவுக்குச் சொந்தம் என்பதை இவை நிரூபிக்கின்றன.

வெள்ளைப்போளம், கந்தவர்க்கங்கள், தேன்கூடு, தேன், திராட்சரசம், பால் இவை அனைத்தும் உன்னதப்பாட்டு 4:10 முதல் 14 ஆம் வரையிலுள்ள வசனங்களில் காண்கிறோம். இதன் விளக்கங்களை நாம் ஏற்கனவே ஆராய்ந்தறிந்துள்ளோம். சபைக்குச் சொந்தமானவை அனைத்தும் தமக்குச் சொந்தமானதால் கிறிஸ்து இயேசு சபையில் மகிழுவதை இது காட்டுகின்றது.

மணவாளனும் மணவாட் தங்களது ஐக்கியத்தையும் அன் ஒருவருக்கொருவர் பரிபாலித்துப் பார மிடமே தோட்டமாகும். அவள் மணவாள நோக்கி, ''நீர் பதினாயிரம் பேர்களில் சிறந் என்று புகழ்ந்துரைக்கும்போது, அவர் அ நோக்கி, ''நீ ரூபவதி'' என்றார். இது விசுவாசிகளுக்கும் நேசராம் இயேசு மிடையே காணப்படவேண்டிய ஐக்கியத் சுட்டிக்காட்டுகிறது.

சபை விசுவாசிகள் தங்களது வாழ் இயேசுவின்றி, தாங்களே உயர்ந்து வி கிறோம் என்று மேன்மைபாராட்டுதல் தவ

''அன்றியும் உன்னை விசேஷ வனாகும்படி செய்கிறவர் யார்? உ உண்டாயிருக்கிறவைகளில் நீ பெ கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொ னானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் மேன்மைபாராட்டுகிறாய்'' (1 கொரி.4:7)

'பெற்றுக்கொள்ளாதவன்போல் மேன்மைபாராட்டுகிறாய்' என்றுள்ள சொ இதனைத் தெளிவாக விளக்குகின் வெள்ளைப்போளம், கந்தவர்க்கம், தேன் தேன், பால், திராட்சரசம் இவை மணவா யினிடம் காணப்பட்டது என்று நேசர் பு தாலும், இவையனைத்தையும் அ எங்கிருந்து பெற்றுக்கொண்டாள்? இ கிறிஸ்துவிடமிருந்தல்லவோ!

சபை விசுவாசிகள் தங்களில் தா மேன்மைபாராட்டாது, அனைத்து மே களையும் நேசரிடமிருந்து ஈவாகப் பெ கொண்டவைகள் என்பதை, எப்பே நினைவுகூரவேண்டும்.

''சிநேகிதரே! புசியுங்கள்; பிரிய வர்களே! குடியுங்கள், பூர்த்தி குடியுங்கள்'' (உன்.5:1).

இவை மணவாட்டியின் வாய்மொழி அவள் தனது அநுபவங்களை மற்றவர்க பகிர்ந்துகொள்வதை இவை குறிக்கின்

கிதரும் பிரியமானவர்களும் விசுவாசி சுற்றிலுமுண்டு.

விசுவாசிகள் தங்களைச் சுற்றியுள்ள கிதர்களிடமும் பிரியமானவர்களிடமும் கள் நேசரோடு பெற்ற இன்பமான வங்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் தை இது உணர்த்துகின்றது.

மேசியாவைச் சந்தித்த அந்திரேயா, இன்பமான அநுபவங்களை அடக்கிக் ள்ள இயலாமல் தன் சகோதரனான ருவிடம் பகிர்ந்து கொண்டதன் விளை ததான், அவன் இரட்சிப்பைப் பெற்றான். பு அன்பின் இயேசுவோடு தான் பெற்ற வத்தை மறைத்து வைக்காமல் நாத்தான் டன் பகிர்ந்துகொண்டதனால் தான், ான்வேல் இயேசுவைக் காண முடிந்தது.

அன்பானவர்களே! நம்மைச் சுற்றி மக்கள் வாழ்கின்றனர். நமது சிநேகிதர் கள் அனைவரையும் நேசராம் இயேசு காண நாம் அழைக்கவேண்டும். இயேசு வோடுள்ள இன்பமான அநுபவங்களை நமக்குள்ளேயே அடக்கிவைக்கக்கூடாது.

சபை இயேசு கிறிஸ்துவோடுள்ள தனது இன்பமான அநுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து, அவர்களையும் நேசரிடம் அழைத்து வரவேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

அருமை சகோதர, சகோதரிகளே! நமது இரட்சகர் உங்களோடு வந்து அமருமாறுள்ள அடைக்கப்பட்ட தோட்டமாக, அழகு தோட்டமாக, வாசனைவீசும் தோட்டமாக, தமது அன்பைப் பகிர்ந்துகொண்டு, உங்களது ஆவியின் கனியாகிய நற்குணங்களால் மகிழும் தோட்டமாக, ஆழமான பிரதிஷ்டைகளைக் கொண்ட தோட்டமாக, வாடைக்காற்றும் தென்றல் காற்றும் வீசும் தோட்டமாக, அழைப்பிலிருந்து வழுவாத தோட்டமாக நீங்கள் காணப்படுகிறீர்களா? ஆராய்வீர்களாக. கர்த்தர் தாமே உங்களுக்குத் தமது கிருபை களைத் தந்தருளுவாராக. (தொடரும்)

பெண்கள் பகுதி

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

உயிரற்ற என் கையை அப்பா வாய்த் தட்டிக் கொடுத்தார். "இப்பொழுது ஒரு வழிதான் இருக்கிறது. பரலோகத்தின் லை நாம் தட்டலாம். நாம் திட்டமிட்ட யே மெக்காவிற்குச் செல்லலாம். தேவன் ஜெபத்தைக் கேட்பார். ஒருவேளை நீ கு நற்சுகம் பெற்று, துதியோடு நாம் பலாம்" என்று அப்பா, தமது துயரத்தை ிக்காண்பிக்காமல் சொன்னார்.

என் துக்கமும், எனது தந்தையின் ம்போல ஆழமாயிருந்தது. அப்பா னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். ும் புன்முறுவல் செய்தேன். அப்பாவோ ும் நம்பிக்கையோடே இருந்தார்.

"மெய்யாகவே, தேவனுடைய வீட்டில் அல்லது ஜம் ஜமின் குணமாக்கும் ஊற்று களிலே நமது இருதயங்களின் வாஞ்சை நிறைவேறுதலைக் காணலாம்" என்றார் என் தந்தை. மெக்கா பயணத்திற்காக ஏற்பாடு செய்யவேண்டியிருந்ததால் அந்த ஹோட்டலி லேயே தங்கினோம். முஸ்லிம்களின் புண்ணிய யாத்திரையின் நாளுக்கு ஒருமாதம் முன்பாகவே நாங்கள் விமானத்தில் எத்தா சென்றடைய ஏற்பாடாயிற்று. இங்கிலாந்தில் எப்படியாவது சுகம் பெற்று, தேவனுக்கு மெக்காவில் நன்றி செலுத்தலாம் என்று அப்பா இவ்விதமாக ஏற்பாடு செய்திருந்தார்.

அந்நாட்களில் என் தந்தை, அவரது நண்பர்களையும், அநேக உறவினர்களையும் சந்திக்கும்படி வெளியே சென்றுவிடுவார்.

அநேகர் அவரைக் காண அங்கு வந்தனர். பொதுவாக, அந்நண்பர்களின் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் என்னைப் பார்க்க விரும்பினாலும், நான் எனது அவலநிலையின் காரணமாக வெட்கப்பட்டதால் வெகு சிலரே என்னைக் காணவந்தார்கள்.

வாடிப்போய், கறுத்தத் தோலுடைய தாய்ச் சுருங்கித் தொங்கி விகாரக் காட்சி தந்த அந்த அங்கங்களை யார்தான் பார்க்க விரும்புவர்? என் பிராயமுள்ள பெண்கள், பொதுவாக செந்நிறத் திருமண உடை அணிந்து, அலங்கார நகைகள் பூண்டு, சிறப்பான சீர்வரிசை தாங்கி, தங்களது கணவரின் இல்லம் செல்லும் காட்சியைக் கற்பனை செய்துகொண்டிருப்பார்கள். நானோ தனிமையிலே விடப்பட்டவளாய், பிறரிடத்தி லிருந்து பிரிக்கப்பட்டவளாய், ஒரு பெண் என்று கருதப்படத் தகுதியற்றவளாய், ஒருபோதும் குணமாக்கப்பட முடியாதவளாய், அவமானமென்னும் திரையால் மூடப்பட்ட வளாய், தன்னந்தனியான எதிர்காலத்தையே நோக்கிப் பார்க்க முடிந்தது.

நாங்கள் ஹோட்டலின் இரண்டாவது மாடியில், அப்பாவினுடைய அறைக்குப் பக்கத்தில் வசதியான ஒரு அறையில் இருந்தோம். அந்த அறையானது தடித்த கம்பளம் விரிக்கப்பட்டு, தனியான குளியலறை கொண்டதாக இருந்தது.

சலிமாவும், சீமாவும் என்னைக் கண்ணும் கருத்துமாய் மாறி மாறி கவனித்துக் கொண்டனர். நான் புத்தகங்களைப் படிப் பதிலும், மதச் சடங்குகளிலும், என் தேவை களை நிறைவேற்றிக்கொள்வதிலும் நேரத்தைக் கழித்தேன்.

ஜன்னலுக்கு வெளியிலே நாங்கள் கண்ட ஆங்கிலேயரின் விந்தையான பழக்க வழக்கங்களைக் குறித்து என் தாதியர் கூறின நகைச்சுவையான காரியங்களைக் கேட்டுக் கேட்டு, சலிப்படைந்து போனேன். பஞ்சாபின் பெண்கள் அணியும் சால்வார் கமீஸ், துப்பட்டா, பர்கா என்னும் கடினமான முகத்திரை எல்... றோடும், ஆங்கிலப் பெண்களின் குட்... சட்டைகளை ஒப்பிட்டுப் பார்த்து, ம... சிரித்தோம்.

எங்கள் மூடுதிரை, நாங்கள் உ... தைப் பார்க்க வழி செய்தது. ஆனால் உ... எங்களைப் பார்க்க முடியாதபடி மறை... முஸ்லிம் வீடுகளில் பெண்களது பர்... ஆண்கள் அவர்களைப் பார்க்கக்கூட... மறைக்கும் பர்தாவும், பெண்களு... பாதுகாப்பைக் கொடுத்ததோடு, கண்... நடத்தைக்கும் உதவியாக இருந்தது.

நாங்கள் இங்கிலாந்தில் தங்கிய... போதிலும் முகமதிய மார்க்கத்தின் அடிப்ப... கொள்கைகளின்படி ஆகாரத்திலும் கவ... இருந்தோம். பன்றி இறைச்சி விலக்கப்... தாகக் கருதப்பட்டது.

என் தந்தை ஒருநாள் எங்களை ஒ... காரில் சுற்றுலா அழைத்துச் சென்ற... ஆங்கிலேயர் நம்மைப்போல் அல்லாதப... ஏன் வித்தியாசமாய் இருக்கின்றனர் எ... விளக்கினார்.

"குல்ஷான், இது கிறிஸ்தவ ந... இங்குள்ள மக்கள் இயேசுகிறிஸ்து... தேவனின் குமாரன் என்று நம்புகின்ற... எவ்வளவு தப்பு, பார்த்தாயா? தேவன் ஒரு... விவாகம் செய்து கொண்டதில்லை... அப்படியிருக்க அவர் எப்படி ஒரு மக... கொண்டிருக்கமுடியும்? என்னவாயி... நம்மைப்போலவே இவர்களும் புத்தகத்தின் மக்கள்; மெய்யாகச் சொ... போனால் முகமதியர்களும், கிறிஸ்தவர்க... ஒரே புத்தகத்தையே அடிப்படைய... கொண்டுள்ளனர்."

இதைக் கேட்டதும் நான் பெ... திகைப்படைந்தேன். இரு வகுப்பினரும் ... புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டிரு... எப்படி இந்த அளவிற்கு வித்தியாச... இருக்கக்கூடும்?

"நாம் செய்ய அனுமதியில்லாத அநேக ...ங்களைச் செய்ய, இம்மக்கள் உரிமை ...வர்கள். பன்றி இறைச்சி சாப்பிடவும், மது ...ம் அருந்தவும், பெண்களுடன் சேர்ந்து ...வும் இவர்கள் பயப்படுவதில்லை. சிறு ...ளகள் வளர வளர, தம் பெற்றோரை ...தில்லை. இருந்தபோதிலும், இம்மக்கள் ... பண்பாடும், நற்கொள்கைகளும் உடைய ...ள். காரியங்களைச் சரியான நேரத்தில் ...யும் குணமுடையவர்கள்" என ...ணினேன்.

அப்பா இக்காரியங்களில் மேதாவி. ...ஸ்தானிலிருந்து எப்பொழுதும் மேல் ...களுக்கு அவர் பருத்திப் பஞ்சை ஏற்றுமதி ...து வந்ததால், இக்காரியங்களில் அனுபவம் ...வர். அவர் மேலும் இறுதியாகச் ...ன்னார், "அவர்களது மார்க்கத்திலிருந்து ...வித்தியாசப்படலாம். ஆனால் அம்மக்கள் ...காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் ...க குணமும் மனிதாபிமானமும் உள்ளவர் கள்".

நான் இந்த ஆங்கிலேயரின் முரண்பாடுகளை ஆராயலானேன். கனிவுள்ள அம்மக்கள் நீர்வளம் மிக்க பசுமை நிறைந்த நாட்டில் வாழ்கின்றனர். அவர்களது புத்தகம் அவர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுத்துள்ளது! இருப்பினும் எங்கள் புத்தகம் அவர்கள் புத்தகத்தோடு தொடர்புடையது. நமக்கும், அவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தின் முக்கிய இரகசியம்தான் என்ன? பதினான்கு வயதே நிரம்பிய சிறுபெண்ணான எனக்கு அக்காரியம் விளங்கிக்கொள்ளமுடியாதபடி ஆழமானதாக இருந்தது. ஆகவே, இக்கேள்வியை என் மனதிலிருந்து அகற்றிவிட்டேன். இக்காரியங்களைக்குறித்து அதிக வெளிச்சம் எனக்குக் கிடைக்க அநேக ஆண்டுகளாயின. இருப்பினும் அது வந்தபோது, இக்கேள்வியை நான் இழிவாகக் கருதமுடியவேயில்லை.

என் கற்பனைகள் எங்களுக்கு முன்பாக இருந்த புண்ணிய யாத்திரையை நோக்கிப் பாய்ந்து சென்றன. (தொடரும்)

...OUTH SECTION

How Can I feel secure in the Lord during troubled times?

We live in a world of stress and ...n. The one thing certain of the world ...s sheer uncertainty. In any time of ...ble, suffering, difficulty, pain or ca...ity, the presence of the Lord com...s us. Many verses bring out the truth ...the Lord assures us of His presence.

The Lord is with you while you ...with Him. If you seek Him, He will ...ound by you (II Chro. 15:2).

Asa, the king of Judah had to ... enemies in the battle. The word ...e from God that only when he was ... God, He would be with him. God ...ld not help them to win the enemies or give them peace and prosperity if they broke His covenant, despised His Word and turned their backs on Him.

Found by you is a wonderful promise valid at all times to all people. When the troubled Judah turned to the Lord of Israel and sought Him, He was found by them. The Lord is faithful to the people, when they fulfil the norms of the covenant.

2. Stand still and see the salvation of the Lord, who is with you. Do not fear or be dismayed.

There were times when God's

servants had to fight. At other times they watched God fight for them. In this context God says that they need not fight. They are simply asked to take up their positions. Stand still and do nothing; see the deliverance that the Lord brings about. Judah and Jerusalem should not be afraid. They should not be dismayed. They should wage war against the enemies. The Lord is with them. He will fight the battle, rout the enemies and grant them victory. They must take their eyes off the foes and fix their eyes on the Lord, the Great Warrior. They should praise the Lord, for His mercy continues for ever.

3. "Do not be afraid of him", says the Lord, "for I am with you to save you and deliver you from his hand"(Jer. 42.11).

God Almighty says that you should not be afraid of the king of Babylon who threatens you. The mighty God is with you, to protect you and deliver you from his cruel hand. You should hold on to the promise of the unfailing God. If you believe, you will see the glory of God. From V.12, we infer that God will show mercy on you so that the one who has taken you captive may have mercy on you and cause you to return to your own land. When God has compassion on us, He can and He will cause men to show compassion on us and the compassion they show would cause us to recognize God's compassion to us. God's compassion is better than man's compassion because the divine compassion lasts for ever.

4. "Be strong, all ye people of land," says the Lord, "and work, I am with you."

Some of the people had been ing when Solomon's temple was stroyed by the Babylonian army m years ago. That temple was magnific but the temple they were now build was small and plain by compari Naturally the people became disc aged, so God said that they should strong, start working and let the w progress. He is faithful in making a c enant with you. When you came ou Egypt, He said that He would dwel your midst. God's presence with us pels fear. If He is not with us, ther good reason to fear many things.

The Apostle Paul considered truth and asked, ***"If God is for us, can be against us?"(Rom 8:31).***

Many people can rise agains They can cheat us, harass us, mock us and even injure us. In the end, can never win. If you belong to God, are on the winning side.

When rough times come, imm yourself in God's Word. Read the pr ises. Read about God's power, G miracles, God's love and the ways has dealt with you. He has helped co less men and women through the as they trusted in Him. He will cert help you, if you place in Him your bounded confidence.

The more you read and study
's Word, the stronger your faith will
Your implicit trust in God will help
grow in your understanding that
trustworthy in all things at all

The more you take courage in the
's presence, the more secure you
eel even in the most turbulent times
e most trying circumstances.

In conclusion let me bring to your knowledge two verses recorded in *Isaiah 25:4,5: "For you have been a strength to the poor, a strength to the needy in his distress, a refuge from the storm, a shade from the heat, for the blast of the terribe ones is as a storm against the wall. You will reduce the noise of aliens as heat in a dry place; as heat in the shadow of a cloud, the song of the terrible ones will be diminished."*

Needless to say, these two verses confirm your security in the Lord.

சிறுவர் பகுதி

நற்கிரியைகளைச் செய்ய நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்

*"ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிற
நாம் கிறிஸ்து இயேசுவில் சிருஷ்டிக்கப்
தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்;
களில் நாம் நடக்கும்படி அவர் முன்ன
அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்*
(எபேசியர் 2:10).

கிறிஸ்துவுக்குள் அன்பான தம்பி,
களே! இயேசுவின் நாமத்தில் உங்களை
துகிறேன். இந்த விடுமுறை நாட்களை
சியோடு கழித்து, மீண்டும் பள்ளிக்குச்
ஆயத்தமாவீர்கள் என்று நம்புகிறேன்.
லனைப் பாராமல் பிறர்க்கு உதவி
வேண்டுமென்பதை நாம் அறிந்திருந்
அநேக சூழ்நிலைகளில் தவறுகிறோம்
த நாம் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட
யைகளில் பெருகுவதால் கிடைக்கும்
க் கீழ்க்காணும் கதையினால் அறிந்து
ருவோமாக.

"டேய்! இன்று மாலை அரசாங்க
த்தில், வெகுநாட்களாக நாம் எதிர்பார்த்
மாவட்டக் கால்பந்துப் போட்டி
றப்போகிறதாம். அனுமதி இலவசம்!
சீக்கிரமாக வீட்டிற்குப் போய் அனுமதி
பெற்று, ஐந்து மணி அளவில் மைதானத்தின் வாயிலில் வந்துவிடுங்கள். சரியா?" என்று தன் நண்பர்களின் பக்கம் திரும்பிக் கூறினான் கிஷோர்.

ஜேசனைக் காணாததால், "அவன் எங்கே?" என்று பார்வையாலேயே, பிரேமைக் கேட்டான். பிரேமின் பார்வையைத் தொடர்ந்து, தன் பார்வையை அவன்பால் திருப்பினான் கிஷோர்.

அங்கு, வயதான ஒருவர் தனது பணப்பையைப் பாக்கெட்டில் போடுவதாக எண்ணி, கீழே தவறவிட்டதைக் கண்ட ஜேசன், அதை எடுத்துக்கொடுக்க ஓடிக்கொண்டிருந்தான். ஒருவாறாக, கூட்டத்தின் மத்தியில் கிடந்த பணப்பையை எடுத்து அந்த வயதானவரிடம் ஒப்படைத்துவிட்டு, மீண்டும் ஓடி வந்தான் ஜேசன்.

அவனைக் கண்ட அவன் நண்பர்களில் ஒருவன், "டேய்! நீ என்ன பெரிய சமூக சேவகனோ? புத்தகப் பையையெல்லாம் விட்டுவிட்டு, ஓடுகிறாயே? உனக்கு என்ன வந்துவிட்டது? கொஞ்ச நாளாகவே உன் போக்குப்

புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறது; சரி சரி, சீக்கிரமாக மைதானத்திற்கு வந்துவிடு,'' என்று கூறிச்சென்றனர்.

வீட்டிற்குச் சென்று, பெற்றோரிடம் அனுமதிபெற்ற ஜேசன், சிற்றுண்டியைக்கூடப் பொருட்படுத்தாமல் விரைவாக மைதானத்தை நோக்கி ஓடினான். அவன் செல்லும் வழியில் ஒரு பாட்டியின்மீது ஒரு சைக்கிள் மோதியதால், அவர்கள் கீழே விழுந்தார்கள். அவர்களுக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை. ஓடிவந்த ஜேசன், அவர்களைக் கைத்தாங்கலாக அழைத்துச்சென்று, சாலையோரத்தில் அமரச் செய்து, தான் கொண்டுவந்திருந்த தண்ணீரையும் அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தான். அதுமட்டுமல்லாது, அருகிலிருந்த அவர்கள் வீட்டிற்கும் அழைத்துச் சென்றான். அவர்கள் வீட்டிலிருந்த கடிகாரம் ஒலிக்கவே, மணியைப் பார்த்து மருண்டான் ஜேசன். ஆறு மணியாகி விட்டதே! என்ன செய்வது? என்று அறியாமல் மைதானத்தை நோக்கி ஓடினான், ஜேசன்.

மைதானத்தின் வெளியே காத்துக் கொண்டிருந்த அவன் நண்பர்களான கிஷோரும், பிரேமும் அவனைக் காணாத விரக்தியில், மைதானத்தின் உள்ளே நடக்கும் கால் பந்து ஆட்டத்தைப் பார்க்க இயலவில்லையே என்ற ஆதங்கத்தில், தங்களது வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். அப்பொழுது மூச்சு இறைக்க இறைக்க அங்கு ஓடி வந்த ஜேசனை முறைத்தபடி, ஒன்றும் பேசாமல் நடந்தனர். இதனைக் கண்ட ஜேசன் தன்னையே நொந்துகொண்டவனாய் மெள்ள நடந்தான்.

ஜேசன், பிரேம், கிஷோர் மூவரும் இணைபிரியா நண்பர்கள். படுசுட்டிகளான மூவரும் படிப்பிலும் கெட்டி. மூவரும் சேர்ந்து அநேக பேச்சுப்போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பரிசு பெற்றிருந்தனர். எப்பொழுதும் மூன்று நண்பர்களும் ஒன்றாகவே இருப்பர். ஆனால், ஒரு சில நாட்களாகவே ஜேசனின் போக்கு, கிஷோருக்கும் பிரேமுக்கும் வியப்பைத் தந்தது. தன் வயதுதையும் மீறி, அவன் அநேகருக்கு உதவுவதாக என்[illegible] ஆயினும், பொறுமையாக இருந்தனர். [illegible] அன்றைய ஜேசனின் செய்கை, அ[illegible] பொறுமையின் எல்லையை மீற வழிவ[illegible]

மறுநாள் காலை பள்ளிக்குச் [illegible] ஜேசனோடு அவன் நண்பர்கள் ஏது[illegible] வில்லை. அத்தருணத்தில் இம்மூன்று ந[illegible] களுக்கும்எதிரியான குறும்புக்கார மா[illegible] தன் காலில் பெரிய கட்டுடன் [illegible] அறைக்குள் நுழையவே, ஜேசன் ஓடி[illegible] கைத்தாங்கலாய், அவனை அவனு[illegible] இருக்கைக்கு அழைத்து வந்தான்.

அந்தக் குறும்புக்கார மாண[illegible] முகத்தில் ஒரு தந்திரப்புன்னகை [illegible] பட்டது. "டேய்! கிஷோர், பிரேம் கேளு[illegible] இனி, ஜேசன் எனது நண்பன்; உங்க[illegible] பழகமாட்டான்'', என்று கேலியாகக் கூறி[illegible] இதனைக் கேட்ட பிரேமும், கிஷே[illegible] வெகுண்டு எழுந்தனர்.

அன்று மாலை வீட்டிற்கு வந்த [illegible] தன் அம்மாவின் மடியில் முகம் பு[illegible] அழத்தொடங்கி, "அம்மா! கடந்த ஞாயி[illegible] கிழமை மாலை, 'ஜாலிடைம்' வேளை[illegible] மோகன் அங்கிள், எபேசியர் 2:10 ஐ வாசி[illegible] அதில், *ஏனெனில் நற்கிரியைகளைச் செ[illegible] தற்கு நாம் கிறிஸ்து இயேசுவில் சிருஷ்[illegible] பட்டு, தேவனுடைய செய்கையா[illegible] கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி[illegible] முன்னதாக அவைகளை ஆய[illegible] பண்ணியிருக்கிறார்* என்று எழுதியிருந்த[illegible]

ஆகவே, நாம் எந்த நற்கிரி[illegible] செய்யத் தயங்கவோ, வெட்கப்படவோ [illegible] என்றும், அதற்காகவே இயேசு அப்பா [illegible] களையெல்லாம் நம் வாழ்வில் அனுமதி[illegible] என்றும் கூறினார். அப்படிச் செய்தால், தேவன் விரும்பும் சிருஷ்டிகளாக மாறு[illegible] என்றும் கூறினார். நான் இவ்வாறான நற்கி[illegible] களைச் செய்கிறதால் யாரும் என்[illegible] புரிந்துகொள்ளவில்லையே! நான் [illegible] செய்வேன்?'' என்று அழுகையி[illegible] கேட்டான், ஜேசன்.

அவன் செய்கைகளுக்கெல்லாம் ...ம் கேட்டு, இனி அவன் நட்பு தங்களுக்கு ...டாம் என்று கூற, அவன் வீட்டிற்கு ...து வந்த, அவன் நண்பர்களான ...ம், கிஷோரும் ஜேசன் பேசியதைக் ... பேச்சற்றுப்போயினர். அமைதி யாக ...ருகே வந்து, "ஜேசன்! எங்களை ...து விடுடா. உன்னைச் சரியாகப் புரிந்து ...ளாததற்கு சாரிடா! இனி, நம்மை ...ும் பிரிக்க முடியாது; நாங்களும் ...ால் இயன்ற உதவியைப் பிறருக்குச் ... தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாய் ...வாம்" என்று உறுதி கூறினர். ஜேசனின் முகம் மலர்ந்தது. எல்லாவற்றையும் நன்மையாக மாற்றிக் கொடுத்த தேவனுக்கு நன்றியைத் தெரிவித்தான்.

இந்தக் கதையை வாசித்த என் அருமைப் பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் நற்கிரியைகளைச் செய்ய தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணுங்கள். நீங்கள் செய்யும் சிறிய உதவி தேவனைப் பிரியப்படுத்தும். இயேசு கிறிஸ்து தாமே உங்களுக்காக அவைகளையெல்லாம் ஆயத்தம்பண்ணியிருக்கிறபடியால், சோர்ந்து போகாமல் நற்கிரியைகளில் பெருகுவீர்களாக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாட்சிப்பகுதி

...ன் பெயர் தினகரன். நான் சென்னை, ...வரம், பாளயக்காரன் தெருவில் வசித்து ...றேன். எனது மகன் ஆலன் ஜோசுவா, 3 ...யது நிரம்பியவன். இவன் தன் தாயின் ...ில் 8 மாதக் குழந்தையாக இருக்கும் ... இவனது சிறுநீரகங்களில் ஒன்று ...யிருப்பதாக, ஸ்கேன் மூலம் கண்டு ...பட்டது. இவன் பிறந்த பின்பு சிறுநீர் ... அவதிப்பட்டு வந்தான். இவனது ...ரு சிறுநீரகமும் பழுதடையாதிருக்க, ...வ சிகிச்சைகள் தொடர்ந்து அளிக்கப் ...வந்தது.

...குழந்தையின் வளர்ச்சியில் பின் ...வுகள் ஏற்படாது தடுக்க, அவனது 3 ...குப் பின்பு, அவன் அறுவை சிகிச்சை ...ாள்ளவேண்டுமென்று மருத்துவர்கள் ...சனை கூறினர். மருத்துவர்களின் ...சனையின்படி, எழும்பூர், குழந்தை நல ...வமனையில் 28-4-2009 இல், சுருங்கி ... சிறுநீரகத்தை நன்குச் சரிப்படுத்தும்படி ...plantation), மருத்துவர்கள் அவனுக்கு ... சிகிச்சை செய்தனர்.

... அறுவை சிகிச்சையின்போது, மருத்துவர்கள் தங்களது கவனக்குறைவால், ஒரு பேண்டேஜ் பேடை சிறுநீர்ப்பையின் உள்ளே வைத்து, மேற்புறம் தைத்துவிட்டனர். இதனால் குழந்தை சிறுநீர் கழிக்க, மிகவும் அவதிப்பட்டான். சிறுநீரில் இரத்தமும், சில நேரங்களில் பேண்டேஜ் துண்டும் வந்துகொண்டிருந்தது.

அவனுக்கு மறுபடியும் ஸ்கேன் எடுத்துப்பார்த்தோம். அப்பொழுது, சிறுநீர்ப் பையிலிருந்த பேண்டேஜ் கண்டுபிடிக்கப் பட்டது. 25-5-2009 இல், அவனுக்கு மறுபடியும் ஓர் அவசர அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அந்த பேண்டேஜ் பேடு அகற்றப்பட்டது.

குடும்பமாக நாங்கள் ஏறெடுத்த மன்றாட்டையும், அநேக தேவ பிள்ளைகளின் ஜெபத்தையும், 24 மணி நேர சங்கிலி ஜெப மக்களின் ஜெபத்தையும் கர்த்தர் ஒருங்கே கேட்டு, என் மகன் தனது 3 1/2 வயதில் மேற்கொண்ட, இந்த இரு அறுவை சிகிச்சைகளைத் தாங்கவும், பூரண குணமடையவும் செய்தார். அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக. ஜெபித்த மக்கள் அனைவருக்கும் எங்களது நன்றி.

சகோ. தினகரன், சென்னை-23.

சபையின் செய்திகள்

அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச்சபைப் போதகர்களின் மனைவிமார்களும், தலைமைச் சபை பெண் ஊழியர்களும் இணைந்த கூடுகை

2009, செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச்சபைப் போதகர்களின் மனைவிமார்களும், தலைமைச் சபைப் பெண் ஊழியர்களும் ஒருங்கே கூடினர்.

போதகர் ஆனந்த் அவர்கள், துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். பின்னர், தலைமைப்போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், ரூத் 2:8 ஐ மையமாகக் கொண்டு, "பெண் ஊழியர்கள் மற்ற பெண்களோடு சேர்ந்து ஊழியஞ்செய்யும் போது, அவர்களிடம் காணப்படவேண்டிய குண நலன்கள்" என்றுள்ள தலைப்பில், ரூத்தை உவமையாகக்கொண்டு விளக்கினார்.

வயலில் ரூத் மற்ற பெண்களோடு சேர்ந்து வேலை செய்தாள் (ரூத் 2:7,8); வீட்டிலே அவள் சாட்சியோடு வாழ்ந்தாள் (ரூத் 2:5,10,11,12); அவளது நடக்கை ஒளிவு மறைவின்றிக் காணப்பட்டது (ரூத் 2:19,21) என்ற குறிப்புகளை நேர்த்தியாக எடுத்துரைத்தார்.

போதகர் தாமஸ் ராஜ் அவர்கள், நியாயாதிபதிகள் 5:7 ஐ மையமாகக்கொண்டு, "எந்தெந்த நேரத்தில் ஊழியர்கள் எழும்ப வேண்டும்" என்பது குறித்த ஐந்து குறிப்புகளைப் போதித்தார்.

எதிரான சூழ்நிலைகள் வரும்போது ஊழியர்கள் தூங்காமல், எழும்ப வேண்டும் (1 இராஜா.19:5); உத்தரவாதத்தை உணர்ந்து, தூங்காது எழும்ப வேண்டும் (1 சாமுவேல் 26:7); மாமிச இச்சைக்கு இடங்கொடுத்துத் தூங்காது, எழும்பவேண்டும் (நியா.16:9); ஜெபிக்க வேண்டிய நேரத்தில் தூக்கத்து இடமளியாது, எழும்பவேண்டும் (மத்.26 தூசியை உதறிவிட்டு எழும்பவேண் (ஏசாயா 52:2) என்பன போன்ற குறிப்புக விரிவாக விளக்கினார்.

ஊழியப் பெண்மணிகள் மேற்கூறிய ஊழியஞ்செய்ய, தங்களை மீண்டும் ஒருமு அர்ப்பணித்து ஜெபித்தனர். தலைவ ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்னர், மதிய உ வழங்கப்பட்டு, கூட்டம் நலமுடன் முடிந்த

செய்திகள்

நியுசிலாந்திலுள்ள ஆக்லாந் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரிச்ச எஸ்பிலே என்பவர், ஆப்பிளில் உ நிறமிகளின் செயல்பாடுகளைக் கண்ட துள்ளார். "ஆந்த்தோசைனின்ஸ்" எனப்படு இந்த வகை நிறமிகள் ஆப்பிளின் தோ நிறத்தைக் கருஞ்சிவப்பு, ஊதா நிறங்களு மாற்ற உதவுகின்றன. சாதாரணமாக, இவ்வ நிறமிகள் பழங்களைக் கண்கவர் நிறங்களு மாற்றுவதற்கு இந்த நிறமிகள் உதவுகின்ற மேலும், இவற்றில் உள்ள, "ஆ ஆக்சிடென்ட்" ரசாயன சத்து, உடலுக்கு மிகு பலனளிக்கின்றது.

ஆப்பிளின் வெளியே சிவப்புத் தோ இருந்தாலும், உள்ளே வெள்ளை நி சதைப்பற்று உள்ளது. ஆனால், மத் ஆசியாவில் சிவப்புநிற உட்பகுதியை கொண்ட ஆப்பிள் வகைகள் உற்பத் யாகின்றன. இவை சத்துக் குறைந்தவை சாப்பிடவும் மக்கள் விரும்புவதில்லை. இ மாற்றி, சதைப்பற்றை வெள்ள நிறமாக்கினால், அதிக அளவில் மக்க விரும்புவர். இப்போது இந்தப் புது நிறமிகளை பயன்படுத்தி ஆப்பிளின் உட்பகுதி வெள்ளையாக்கி, மணம் மிகுந்த ஆப்பிள்க உற்பத்தி செய்ய முயற்சி நடக்கிற எஸ்பிலேயின் ஆராய்ச்சி, உயர்தர ஆப் உற்பத்தியை ஊக்குவிக்கும் எதிர்பார்க்கப்படுகிறது. (தினமலர் 13-9-200

அவர்

உனக்காக அமைதியாய்த் திட்டமிடுவார்

அவர் உனக்காக அமைதியாய்த் திட்டமிடுவார்,
சர்வஞானியின் பொறுப்பிலுள்ளாய் நீ;
ஒவ்வொரு நுட்பமான கண்ணியைக் கடப்பதற்கு
தேவன்தாமே உன் வழிகாட்டியாகப் பொறுப்பேற்கிறார்.

அவர் உனக்காக அமைதியாய்த் திட்டமிடுவார்,
ஆதலால், நிச்சயமாக அவர் தோல்வியடையார்!
இறைவனின் மாறா உண்மையில் சார்ந்துகொள்,
அவரில் உறுதியாக நீவெற்றியடைவாய்.

அவர் உனக்காக அமைதியாய்த் திட்டமிடுவார்
அதிசயமான, வியத்தகு அன்பை.
கண் கண்டதில்லை, செவி கேட்டதுமில்லை,
ஆயின் அது உனக்காக மேலுலகில் வைக்கப்பட்டுள்ளது.

அவர் உனக்காக அமைதியாய்த் திட்டமிடுவார்,
அவர் நோக்கம் அனைத்தும் வெளிப்படும்;
சிக்கல்கள் மிகும் குழப்பம் நீங்கி, முடிவிலே ஒளி வீசும்,
அது அளவிற்கடங்கா, ஒரு திறம்வாய்ந்த படைப்பு.

அவர் உனக்காக அமைதியாய்த் திட்டமிடுவார்,
தந்தையின் அரவணைப்பில் மகிழும் குழந்தை நீ,
அவர் அன்பை மற்றெவரும் உரிமையாக்காது போன்று,
நீமட்டுமே அவருக்குப் பிரியமானாய்.

-ஈ. மேரி கிரைம்ஸ்

Reg.Number TN/CCN/385/09-11. Licence to the post under WPP No.TN.CCN.85/09-11
Regd.Under Regis.of News paper for India No.(1)1295/57, Posting date 29th & 30th of every mo
Date of Publication: monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai - 600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சிகள்
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. எஸ்தர்
6. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
7. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
8. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
9. தசமபாகங்கள் கர்த்தருக்கு உரியன
10. எனது அநுபவங்கள்
11. Jesus Met Me in Jail
12. Spiritual Truths from the Bible
13. Tithes belong to the Lord
14. My Experiences

Book-Rs.10/-

15. அநாதி கிருபை
16. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
17. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
18. நீதிமான்கள்
19. கிறிஸ்துமஸ் செய்திகள்
20. இயேசு உயிர்த்தெழுந்தார்
21. நீதியின் சூரியன்
22. பரதேசிகளாகிய நாம்
23. கிறிஸ்தவ குடும்பம்
24. நித்திய பிரதான ஆசாரியர்
25. சபை சபைதானா?
26. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
27. புத்தாண்டு தேவசெய்திகள்
28. விழித்திரு
29. சிலுவைக்கு அப்பால்
30. வணக்கம்
31. இரட்சிப்பின் சாட்சிகள்
32. ஜீவனுள்ள சாட்சிகள்
33. அற்புத சாட்சிகள்
34. சாட்சிகள்
35. எரி நரகத்திற்குத் தப்பினேன்
36. மாபெரும் மாற்றம்
37. நன்றியுள்ள சாட்சிகள்
38. கல்லூரியில் அற்புதங்கள்
39. நற்செய்தி கதைகள்
40. தீப ஒளி
41. வழிகாட்டும் கதைகள்
42. அந்தக் கடிதங்கள்
43. அந்த மயில்கள்
44. கனமான ஊழியம்
45. வெளிச்சம்
46. ஐக்கியம்
47. இன்னும் சந்தேகமா?
48. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
49. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
50. மேய்ப்பரின் அறிவுரைகள்
51. முதலாம் ஆதாம்
52. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
53. நீரே என் மேய்ப்பர்
54. தேவ ஊழியம்
55. உத்தம ஊழியன்
56. Eternal Grace
57. The Star
58. The New Year
59. Spiritual Questions
60. The Timely Warning
61. The Blessing
62. Your Response to the Cross
63. The Power of Prayer
64. Springs in the Valley
65. A Narrow Escape from Hell

Book-Rs.15/-

66. ஏழு வார்த்தைகள்
67. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
68. இயேசுகூறின உவமைகள்
69. அதிசயமான தேவகிருபை
70. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 4
71. Amazing Grace of God

Book - Rs.20/-

72. என் நேசரின் சத்தம்
73. தேவனுடைய வாக்குத்தத்த செய்திகள்
74. வாக்குத்தத்த செய்திகள் 20
75. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
76. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
77. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
78. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
79. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
80. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
81. ஒருவருக்கொருவர்
82. Successful Ministers of the Lord
83. Messages of God's Blessings 1
84. Messages of God's Blessings 2

Book - Rs.25/-

85. A Good Soldier of Jesus Christ
86. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
87. வாக்குத்தத்தச் செய்திகள் 200
88. வாக்குத்தத்தச் செய்திகள் 200
89. தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
90. வாக்குத்தத்தச் செய்திகள் 200
91. ஜெபத்தின் வல்லமை

Book - Rs.30/-

92. நல்ல போர்ச்சேவகன்
93. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line: 26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622388/26622775 website www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org

Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street,
Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell:9841429079